## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No. 67/2012**

Deposition of **PW.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 27.01.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ராஜேந்திரன் Father's Name : அழகப்பன்

துவக்க நேரம்: 04.05 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) கடந்த 28.04.2010 அன்று எனது தகப்பனாரும், எனது தாயாரும் ச.எண்.272/1-ல் உள்ள புஞ்சை 0.91.0 ஹெக்டேர் நிலத்தில் வடபுறம் உள்ள ஏக்.1.11-1/2 செண்ட் நிலத்தை தானமாக எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனக்கு எழுதிவைத்த அதேநாளில் பிரதிவாதிக்கு எந்த தானசெட்டில்மெண்ட் பத்திரமும் எனது பெற்றோர் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான்.

2) எதனால் ஒரே தேதியில் இருவருக்கும் தானசெட்டில்மெணட் எழுதிவைக்கப்படவில்லை என்றால் தானசெட்டில்மெண்ட் எழுதியபோது பிரதிவாதி தனக்குண்டான பாகத்தை பின்னிட்டு வாங்கிக்கொள்வதாக கூறிவிட்டார் அதனால் அன்றைய தினம் அவர் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதப்படவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும் பிரதிவாதிக்கு தெரியப்படுத்தாமல் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் எனது பெற்றோரிடமிருந்து எனக்கு தேவையான பாகத்தை தானமாக எழுதி வாங்கிகொண்டேன் என்றால் சரியல்ல.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.67/2012, Dt.27.01.2026.

3) எனக்கு எழுதிக்கொடுத்த பாகத்தில் 2 வில்லை வீடுகள் இருந்தது என்றால் சரிதான். மேற்படி 2 வீடுகளும் சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு எனது முன்னோர்கள் வாழ்ந்த வீடுகள் என்றால் சரிதான். எனது பெயருக்கு எழுதிவைக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் வில்லை வீடுகள் இருப்பது காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வீடுகளுக்கு செல்ல மெயின் ரோட்டிலிருந்து வடபுறமாக பாதை உள்ளது என்றால் சரியல்ல, வயல்வெளியாகதான் சென்று வருவோம். நான் சொல்வது தவறு என்றாலும் ச.எண்.272/1-ல் வடபுறமாக மேற்படி வீடுகளுக்கு செல்ல ஓடையை ஒட்டினார்போல் பாதை உள்ளது என்றால் சரியல்ல.

4) மேற்படி பாதை குறித்து நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் எனது வீட்டின் முன்பு இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த அறிக்கை தவறானது அவ்வாறு பாதை இல்லை. அவ்வாறு நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறு இருப்பதாக ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் எனது வழக்கறிஞரை கேட்டால்தான் தெரியும்.

5) தாவா சொத்துக்களை தவிர எங்கள் குடும்பத்திற்கு வேறு இடத்திலும் நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். என்னுடன் பிறந்த மற்றோரு சகோதரருக்கு எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டது என்றால் 4 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு எந்த கிராமத்தில் உள்ள நிலம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தாண்டானூர் கிராமத்தில் உள்ள நிலம் கொடுக்கப்பட்டுள்ளது.

6) ச.எண்.272/1-ல் வடபுறத்தில் கொட்டகையும், தென்புறத்தில் கிணறு அமைந்துள்ளது என்றால் சரியல்ல, கிணறு வேறு ஒரு சர்வே எண்ணில் அமைந்துள்ளது. ரோட்டின் கிழபுறத்தில் உள்ள நிலத்தில் கிணறு இல்லை என்றாலும் ஓடையின் கிழபுறத்தில உள்ள நிலத்தில்தான் கிணறு உள்ளது என்றாலும் சரிதான். அவ்வாறு கிணறு உள்ள நிலமும் இருவருக்கும் பொதுவானது என்றால் சரிதான்.

7) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தாவா சொத்து தொடர்பாக நானும், பிரதிவாதியும் கடந்த 10.03.2012 அன்று ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பாகப்பிரிவினை ஒப்பந்த முச்சிலிக்கா எழுதிக்கொண்டோம் என்றால் இல்லை. அவ்வாறு எங்களுக்கு எந்த சமரசமும் நடைபெறவில்லையா என்றால் ஆமாம். மேற்படி ஒப்பந்ததின்படி நடந்துக்கொள்ளாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) ஓடைக்கும் கிழக்குபுறம் உள்ள நிலத்தில் தென்புற ஓரத்தில் கிணறு அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது வழக்குரையில் மேற்படி கிணற்றிற்கு தென்புறம் பாதை உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாதையென நான் குறிப்பிட்டுள்ள இடத்தில் 3 பனைமரங்கள் உள்ளது என்றால் பனைமரங்கள் கிணற்றின் ஓரமாக உள்ளது, அதை ஒட்டி தடம் செல்கிறது. நான் சொல்வது தவறு என்றாலும் தடம் என நான் சொல்லியுள்ள பகுதியில்தான் பனைமரம் உள்ளது என்றாலும் சரியல்ல.

9) பிரதிவாதி தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரிய மனு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த உத்தரவின்பேரில் பிரதிவாதி மாண்புமிகு சென்னை சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி மனுவில் நிலஅளவையர் மூலம் தாவா சொத்துக்களை அளவீடு செய்தால் நீதிமன்றத்திற்கு உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதால்தான் அவ்வாறு அளவீடு செய்ய ஆட்சேபனை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.67/2012, Dt.27.01.2026.

10) எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே நிலம் தொடர்பான தகராறில் நான் பிரதிவாதியை தாக்கியதற்காக என்மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 வழக்கு நடைபெற்று எனக்கு விடுதலை தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் பிரதிவாதி சொத்தை அபகரிக்கும் வேண்டும் என்ற எண்ணித்தில் பொய்யான அம்சங்களுடன் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் பிரதிவாதியை மிரட்டி அவரை அடிப்பணிவைக்கவும் வேண்டி குற்றவழக்குகளில் ஈடுபட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு பிரதிவாதியுடன் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 04.53 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.67/2012, Dt.27.01.2026.